**செய்தி வெளியீடு எண்.347** **நாள்.24.04.2010**

# திண்டுக்கல் மாவட்டத்தில் பாம்பு கடித்து உயிரிழந்த சிறுவன் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

திண்டுக்கல் மாவட்டம் அ.வெள்ளோடு கிராமத்தைச் சேர்ந்த திருமதி எஸ்.நிர்மலா அருள்ராணி என்பவரின் 14 வயது மகன் சேவியர் அருள்ராஜ் கடந்த சில நாட்களுக்கு முன்பு பாம்பு கடித்து சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையிலும், பின்னர் மதுரை அரசு மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டு சிகிச்சைகள் அளித்தும் பயனின்றி இறந்துவிட்டார். இதுகுறித்த விவரம் திண்டுக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செல்வி கே.பாலபாரதி வாயிலாகத் தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து, மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்த முதலமைச்சர் கலைஞர், உயிரிழந்த சிறுவனின் குடும்பத்தார்க்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அக்குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிட இன்று (24.4.2010) ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.